[24th January 1970

தொடக்கப்பள்ளிகளில் பணிபுரியும் இடை நிலைத்தர ஆசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்திலுள்ள தொடக்கப் பள்ளிகளில் உயர்நிலைத் தர ஆசிரியர் பதவிகளில் பணிபுரியும் இடைநிலைத் தர ஆசிரியர் பதவிகளை (Secondry Grade) இடைநிலைத் தர ஆசிரியர் பதவிகளாக உயர்த்தும் ஆணைகள் ஏதேனும் 1969–70இல் பிறப்பிக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவ்வாறு உயர்த்தப்பட்ட ஆசிரியர் பதவிகளின் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 3,000.

திரு. ஜி. சுவாமிநாதன் : உயர்த்திக் கொடுத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மொத்தம் 14 ஆயிரம் ஆசிரியர்கள் 1967-ல் இருந்தார்கள். அதில் 11 ஆயிரம் ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள். அவர்களுக்கு செகண்டரி கிரேடு அளவுக்கு ஊதியம் உயர்த்தித்தர வேண்டுமென்று உத்தரவாகியிருக்கிறது. மீதமுள்ள 3 ஆயிரம் ஆசிரியர்களும் இந்த ஆண்டு 1970–71ல் மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டு செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கான ஊதியம் அளிக்கப்படுகிறது.

திரு. எம். ராஜா அய்யர் : 1970–71-க்குப் பின்னால் ஹையர் கிரேடு போஸ்டுகளில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு சம்பளம் பெறுமல் பணியாற்ற அனுமதித்துள்ளதால், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் எல்லோருக்கும் ஹையர் கிரேடு போஸ்டில் அவர்கள் இருந்தாலும் உயர்தரத் தகுதிகளை வைத்துக்கொண்டு ஹையர் கிரேடு போஸ்டில் இருப்பதால், அதற்காகக் குறைந்த சம்பளம் வாங்கும் நிலைமை இல்லாமல், மாநிலம் முழுவதும் உயர்த்திக்கொடுக்கும் அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : செகண்டரி கிரேடுபெற்ற ஆசிரியர்கள் அத்தனை பேருக்கும் செகண்டரி கிரேடு சம்பளம் தர வேண்டுமென்றுதான் படிப்படியாகத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. 11 ஆயிரம் ஆசிரியர்கள் கொடுக்கப்படுகிறார்கள். 3 ஆயிரம் ஆசிரியர்களுக்குக் கொடுக்க இருக்கிறார்கள். மறுபடியும் அவற்றைக் கணக்குப் பார்க்கும் போது அவர்களும் கவனிக்கப்படுவார்கள்.

National Foundation for Teachers' Welfare.

*52 *Q.*—**Thiru G. SWAMINATHAN :** Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) the total amount to the credit of the National Foundation for Teachers' Welfare, Tamil Nadu Branch ; and

(*b*) the amount disbursed during the financial year 1968–69 ?

ஆசிரியர் நலம் குறித்த தேசிய நிறுவனம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர் நலம் குறித்த தேசீய நிறுவனத்தின் தமிழ்நாடு கிளைக்கு வரவாக வைக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(இ) 1968–69-ஆம் நிதி ஆண்டில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

24th January 1970]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ரூ. 15,61,401·98.

(இ) ரூ. 48,097·83.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 15 லட்சம் ரூபாய் அளவில் வருமானம் வந்திருக்கும்போது, ரூ. 48 ஆயிரம் அளவில்தான் கொடுத்திருக்கிறோம். எவ்வளவு மனுக்கள் வந்தன ? அவற்றில் எவ்வளவு கொடுக்கப்பட்டன ? எவ்வளவுக்கு கொடுக்கப்படாமல் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மொத்தம் ரூ. 15,61,401·97 இதில் சேர்ந்திருக்கிறது. 1967–68-ல் 640 மனுக்கள் வந்தன. அதில் ஆராயப்பட்டு தகுதியுடையனவாக வந்திருப்பது 436. அவற்றில் 269 பேருக்கு அளிக்கப்படுகிறது. மற்றவை பரிசீலிக்கப்பட வேண்டும். இதுவரையில் மொத்தம் 1967–68, 1968–69-ல் 1969 செப்டம்பர் முடிய இந்த ஆண்டு வரையில் ரூ. 1,30,017·64 அளிக்கப்பட்டிருக்கிறது. மற்றவை விரைவில் குழுவினால் ஆராயப்பட்டு விரைவில் அளிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது.

Rajah's High School, Sivaganga.

*53 *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that there is faction among the students of Rajah's High School, Sivaganga as a result of faction among the teachers themselves and as a result of this, disputes have arisen ; and

(*b*) if so, the action taken thereon ?

சிவகங்கை அரசர் உயர்நிலைப்பள்ளி.

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிவகங்கை அரசர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குள் தகராறு உள்ள காரணத்தால் பள்ளி மாணவர்கள் இரு பிரிவாகப் பிரிந்து தகராறுகள் ஏற்படுவதை இந்த அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) சிவகங்கை அரசர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குள் தகராறு ஏதும் கிடையாது. மாணவர்களுக்குள்ளும் இரு பிரிவுகள் ஏற்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Tamil Nadu Raffle Scheme.

*54 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the prize amounts under Tamil Nadu Raffle Scheme were taken by the Government because they were not claimed by the prize winners ; and

(*b*) the total amount of these prizes ?

தமிழக அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழக அரசுப் பரிசுச் சீட்டு திட்டத்தில் சில பரிசுகளுக்கு பரிசுத் தொகைகளை கோரிப் பெறாத காரணத்தால் அத்தொகைகள் அரசுக்குச் சேர்ந்துவிட்டன என்பது உண்மையா ?